**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

# SC.No.266/2023

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கௌதம் | த/பெ | : | ஜெயக்கண்ணன் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 14.08.2025 | முகவரி | : | |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக துறையூர் ஜமின்தார் மேல்நிலைப்பள்ளி வழியாக சென்று கொண்டிருந்தேன். அப்போது துறையூர் போலீஸார் என்னிடம் வழக்கு சம்பவம் பற்றி கூறி அந்த இடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதால் நானும், என்னுடம் இருந்த ரஞ்சித் என்பவரும் சாட்சியாக இருக்க சம்மதித்து பார்வை

மகஜரில் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீஸார் என்னை விசாரித்தார்கள். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.1**.

**குறுக்கு விசாரணை இல்லை.**

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்

**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**<u>துறையூர்.</u>**

## <u>SC.No.266/2023</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் சாட்சியாகிய <u>அ.சா.3</u> வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாஸ்கரன் | த/பெ | : | பெருமாள் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 14.08.2025 | முகவரி | : | |

**<u>எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.</u>**
**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

1. நான் துறையூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது துறையூர், வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகிறேன். 03.01.2021ம் தேதி நானும், துறையூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கயல்விழி அவர்களும் அலுவலகத்தில் இருந்தோம். துறையூர் போலீஸார் எங்களை வந்து அழைத்தனர். சொரத்தூர் ரோடு வரை திருட்டு வழக்கு சம்மந்தமாக செல்லவேண்டும் என அழைத்தார்கள். அரசினர் மேல்நிலைப்பள்ளி, சொரத்தூர் அருகே எதிரி இளவரசன் என்பவரை பிடித்து வைத்திருப்பதாக கூறினார்கள். நாங்கள் அங்கு சென்றோம். 03.01.2021ம் தேதி மதியம் 11.45 மணியளவில் எங்கள் முன்னிலையில் எதிரி

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி முள் புதரில் இருந்து ஒரு கத்தியை எடுத்துக்கொடுத்தார். அதே முள்புதரில் இருந்து ரூ.350/- பணம் எடுத்துக்கொடுத்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சி கையெழுத்து செய்தோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் இரண்டாவது சாட்சி கையெழுத்து செய்தேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்

**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**<u>துறையூர்.</u>**

**<u>SC.No.266/2023</u>**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் சாட்சியாகிய <u>அ.சா.4</u> வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கயல்விழி | த/பெ | : | தங்கராஜ் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 14.08.2025 | முகவரி | : | |

**<u>எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.</u>**
**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

1. நான் தற்போது கோம்பை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் துறையூர் டவுன் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது 03.01.2021ம் தேதி நான் அலுவலகத்தில் இருந்தபோது துறையூர் போலீஸார் என்னை திருட்டு வழக்கு சம்மந்தமாக சொரத்தூர் ரோட்டுக்கு வர அழைத்தார்கள். நானும், கிராம உதவியாளர் பாஸ்கரன் என்பவரும் சொரத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளி முன்பு காலை 10.30மணிக்கு சென்றோம். எதிரி இளவரசன் என்பவர் அங்கு இருந்தார். அவருடன் துறையூர் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் போலீஸார் அங்கு இருந்தனர். எதிரியை போலீஸார் விசாரித்தபோது சரத்குமார் என்பவரை எதிரி கத்தியை காட்டி மிரட்டி

ரூ.350/- பாக்கெட்டில் இருந்து பறித்ததாக எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் கொடுத்தார். கத்தியை கேட்டபோது மேற்படி பள்ளிக்கு பின்புறம் உள்ள முள் புதரில் கத்தியை மறைத்து வைத்திருப்பதாகவும், அழைத்து சென்றால் எடுத்துகொடுப்பதாகவும் கூறினார். நாங்கள் எதிரியுடன் சென்றோம். அவர் முள் புதரில் இருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அவர் பறித்த பணம் ரூ.350/- எடுத்து கொடுத்தார். போலீஸார் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எழுதி பதிவு செய்தனர். அதில் நானும், பாஸ்கர் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். அதிலும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2**.

**குறுக்கு விசாரணை இல்லை.**

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்